# தேயிலைத் தோட்ட

## மக்கள் பாடல்கள்



கண்டி எம். ராமச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தோட்ட

## மக்கள் பாடல்கள்

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY

492968

# TEA ESTATE

## Folk Songs

492968

492968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தோட்ட

## மக்கள் பாடல்கள்

# තේ වතු ගී

# TEA ESTATE

## Folk Songs

492968

492968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் வெளியிட்ட

நூல்கள் :

1. விடிவை நோக்கி - கவிதைகள் - *1987*

2. கவிதை - கவிதைகள் - *1987*

3. சிறுவர் மாலை இசைக் கவிதைகள் - *1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : தேயிலைத் தோட்ட
மக்கள் பாடல்கள்

ஆசிரியர் :

கண்டி எம். ராமச்சந்ரன்

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

முதற் பதிப்பு : 1996 - 07 - 29

வெளியிடுபவர் :

கண்டி எம். ராமச்சந்ரன்
11/10, ரிவர் சைட் ரோட்
கலுதாவளை
மாத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This book

is printed through the patronage and sponsorship of the Sri Lanka National Library Services Board. It Should be noted that the contents of this book do not reflect the views of the National Library Services Board.

பதிப்புரிமை :

திருமதி சிவமணி ராமச்சந்ரன்

ISBN : இலக்கம் 94/128

1996 - 07 - 29

அட்டைப் பட வரைவு :

திரு. எஸ். தியாகராஜா

பதிப்பகம் :

சிட்னி பிரிண்டர்ஸ்

258/1, டீ. எஸ். சேனாநாயக்க வீதிய
கண்டி.

ஒத்தாசை :

திரு. பி. சிவசண்முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச மர் ப் ப ண ம்

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY

பாட்டாளி வர்க்கத்துக்கும்
அதன் கூட்டாளிகளுக்கும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்/என் - உரை

மலையகத் தமிழ் மக்களின்
மண் வாசனையில்
நான் கேட்டது -

உரலை ஒரல் என்பார்
இலையை எலை என்பார்
யார் ? என்பதை ஆரு ? என்பார்
நியாயம் என்பதை ஞியாயம் என்பார்;
விளைவு என்பதை வெளைவு
பார்த்து என்பதை பாத்து (ஆசெதுகை)
உங்கள் என்பதை ஒங்க
முதல் என்பதை மொதல்
புதை என்பதைப் பொதை
சிலை என்பதைச் செலை...
என்றெல்லாம் பேச்சு வழக்கு !

யாப்பு இலக்கண மரபு
இன எழுத்துக் குழுக்களுக்கும் ...
இவர்களது பாமரப் பாவனைக்கும்
நெருக்கம் இருப்பதால் ...

பாமரர் வீட்டுப் பிள்ளையைத்தான்
பண்டிதர்கள் தம்பிள்ளையாய்த்
தத்தெடுத்துக் கொண்டனரோ ?

- கண்டி எம். ராமச்சந்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனைவி மக்களுக்கு -

★ நான் மரணித்த
நிமிடத்தில் இருந்து
ஆறே ஆறு மணிக்குள்ளே
அருகில் அயலில் உள்ளோரை
மாத்திரம் கூட்டி ...
ஐந்நூறு ரூபாவிற்குக் குறைந்த
ஆடம்பரம் இல்லாத ஒரு
சவப்பெட்டியில் எனது
பூதவுடலை இட்டு
அருகிலுள்ள பொது மயானத்தில்
புதைத்து விடவும் !

★ தம்பிதங்கைகள் எனப்படுவோர்
வந்துசேரும் வரையில்
ஆறப் போட்டே
எனது பூதவுடலை
நாறவைக்க வேண்டாம் !

★ புதைத்த பின்னர் என்
புதைக்குழிப் பக்கம்
யாருமே திரும்ப வராதீர் !
வருவது நேர விரயமே !

★ எனது பூதவுடலுக்கு
எந்தச் சமயச் சடங்கு
சாத்திரஞ் சாந்தி செய்வதோ
என்னை அவமதிப்பதாகும் !

— கண்டி எம். ராமச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே -

01. ஆண் குழந்தை தாலாட்டு

02. பெண் குழந்தை தாலாட்டு

03. 1987 ?

04. மனப் படம்

05. ஊருசனம் தூங்கிறிச்சி

06. மறவேன்

07. பந்த பாசம்

08. தோணி யோட்டம்

09. கழிவிரக்கம்

10. எந்நன்றி கொன்றார்க்கும்

11. பிச்சை நன்றே

12. பாதை தெரியுது பார்

13. வேண்டி நிற்போம்

14. புதுப் பயணம்

15. முன் வாரீர்

16. மெய் வருத்தம்

17. பொங்கல்

18. எதிர்பார்ப்பு

19. கடன் பழு

20. வசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஒப்பாரி

22. ஆயத்தம்

23. சங்கக் கடைகள்

24. கணக்கப் பிள்ளை

25. ஒப்பாரி

26. பால் நிலவு காய்ந்ததே

27. ஒப்பாரி

28. தர்க்கம்

29. தெம்மாங்கு

30. சங்க(ம)ம்

31. (சோ / கோ) ஷலிஸ்ட்ஸ்

32. தலை வேறு

33. நீதி

34. பயணம்

35. மாரி / மேரி – அம்மா

36. உழைப்பு

37. கோலாட்டம் ... கும்மி

38. மலையகக் கல்வி

39. கேளு

40. ஜனநாயகம்

41. தோடுடைய செவியன்

42. பாராளு மன்றம்

43. தஸ்லிமா நஸ்ரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. ஆண் குழந்தை தாலாட்டு

தாலேலோ தாலிலலோ !
தாலிலலோ தாலேலோ !
தாலிலலோ தாலேலோ !
தாலேலோ தாலிலலோ !

ஆறோடே ஆறுமணி - இங்கே
ஆறுநாள் வேலேசெஞ்சி - முழுக்
காடுமலை நானலைஞ்சி
ஏழாம் நாள் ''லீவு'' டாய்யா !

ஒன்னெயெக் குளுப்பாட்டி - பின்
ஒழுங்காத் தலைதுவட்டி - நான்
இட்டேன்டா தொட்டியிலே
இனிநீயுங் கண்ணுறங்கு !

வீட்டைமெழு கிட்டுத்தான் - நான்
பானைசட்டி கழுவோணும் - பின்
ஊத்தைத்துணி மணிதுவச்சி
நானுங்குளிக் கோணுண்டாய்யா !

சாமிவேறே கும்புடணும் - பின்
சோறுகறி ஆக்கோணும் - என்
சாமி ! நீ தூங்குடாய்யா !
சங்கடங்க பண்ணாமே !

மாடாய் நாம் ஒழைச்சாலும் - ஒத்தெச்
சதமுமே மிஞ்சுதில்லே - நாம்
ஓடாகத் தேஞ்சோண்டா !
உள்ளசொத்தே நீதாண்டா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைநீ குடுக்காமே - செத்தே
தூங்கி எழுராசா ! - நமக்கும்
நல்லகாலம் ஒண்ணுநாளை
இல்லேண்ணுபோ காதுடாய்யா !

## 02. பெண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ? யாரிவளோ ?
யாரிவளோ ? ஆராரோ ?
யாரிவளோ ? ஆராரோ ?
ஆராரோ ? யாரிவளோ ?

கண்ணே ! நவமணியே ! - என்
கற்பூரப் பெட்டகமே ! - உன்
சின்ன விழிமூடி - என்
செல்வமேநீ கண்ணுறங்கு !

ஏறாத மலையேறி - நான்
கால்கடுக்க அலைஞ்சலஞ்சி
கண்டசுகம் ஒண்ணுமில்லே - இங்கே
கஷ்டம் தொடரு தம்மா !

கொழுந்து நிதம் கிள்ளிக்கிள்ளி - என்
வெரலொடிஞ்சே போனாலும்
கேப்பாரும் இல்லை யம்மா ! இங்கே
காப்பாரும் இல்லை யம்மா !

வீடுவாச மொழுகிக்கூட்டி
வெறகொடிக்கப் போகோணும் - எனக்கு
வேலே நெரய வுண்டு - சின்ன
விழிமூடி நீயுறங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணிபோடப் போனநொப்பன் - வந்து
தடுமாறிக் கத்தும் முன்னே - நான்
சோறுகறி ஆக்கோணும் - தாயே ! நீ
சுணங்காமல் தூங்கி எழு !

நாலெழுத்துப் படிக்காததாலே - நான்
நாய்படாத பாடுபட்டேன் - நீயோ
நல்லாப் படிக் கோணுமம்மா !
நாலுபேரு மதிக்கவேதான் !

நல்லாவே நீபடிச்சி
நாலுபேர்க்குப் புத்திசொல்லும் – ஒரு
நல்ல டீச்சர் வேலைசெய்ய - நீ
நாளை உயரப் பார்க்கோணும் !

புத்தி கெட்ட நொப்பனையும் - நீ
புத்தி சொல்லித் திருத்தோணும்
இப்பவே தூங்கி எழு – என்
இளைய மகா ராணி !

தோட்டத்து இஸ்கூலில் நீ
தொடர்ந்து படிச்சி யிண்ணா ...
''மெத்ஸ்'' ''சயன்'' சில் மொத்தைவைத்தே
மொட்டையாப் போவியாமே ?

தோட்டக் காட்டுப் புள்ளைகளே
துண்டுவிழ வைக்கண்ணே
''மெத்சு சயன்ஸ்'' இருக்குண்ணு
புத்தியுள்ளோர் சொல்லுறாக ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திகெட்ட சனமுங்குற - அந்தக்
கெட்டபேரே மாத்தணுண்ணா - நீ
''மெத்சு'' ''டியூஷன்'' கடைக்கே
சத்தியமாப் போகணுமாம் ?

சாதி மத முங்குற - அந்தச்
சாக்கடையில் விழுகாமே - சம
நீதியைக் காண்பதற்கு - தாயே !
நீயும் சற்றே தூங்கிஎழு !

**03. 1987 ?**

வீடற்றோர் ஆண்டுண்ணு
வீதிபூராப் பந்தலிட்டு
வாய்கிழியக் கத்துறாக ...
''டீ. வீ'' லேயும் காட்டுறாக !

வீடுகளேக் கட்டிக்காட்டி
வேறவர்க்கோ குடுக்குறாக ....
எங்களுக்கு மட்டுந்தானே
இதுவரைக்கும் ஒண்ணுமில்லே ?

கஷ்டப்பட்ட ஆளுகதான்
கஷ்டப்பட வேணுமுண்ணு
சட்டமேதும் இருக்குங்களா ?
சத்தியமாத் தெரியலிங்க !

தலைச் சொமையே எறக்கிவைக்க
வழியிலுண்டு சுமைதாங்கி - எங்க
மனச் சொமையே எறக்கிவைக்க
மார்க்க மொண்ணைக் காணலியே ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. மனப் படம் !

புல்லுவெட்டிப் புல்லுவெட்டி - முதுகு
முள்ளொடிஞ்சி போனாலும்
தொல்லை தொலையாத
தொடர்கதையாய் ஆனதையா !

சொல்லி அழுதாலும்
சொகமு மில்லே – ஆனாலும்
என்னே அறியாமே
ஏம்மனம் தானாவே
ஏங்கி அழுகுதையா !

பணியே லயத்துப்
பக்க மலையிலே நான்
புல்லுவெட்டும் நேரத்துலே
'புக்' குண்ணுபத்தி மனமெரியும்
புத்துப் பாம்பு படமெடுத்து
கொத்திக் குதறுதல் போல் !

(மாறு)

எட்டு வருஷம் முன்னே
இங்கே தான்என் தகப்பன்
பட்டப் பகலுலே தானே – நல்ல
பாம்பு கொத்திச் செத்தாரே !

பொதெச்ச வெடமே இப்போ
புல்மொளைச்சீ மூடி றிச்சி – நெனைப்பே
செதையாமே அடி மனத்தில் - நான்
சேமிச் சேதான் வச்சிருக்கேன் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஊருசனம் தூங்கிறிச்சி ...

பாடு பட்டுக்
காடு வெட்டி ...
காடு வெட்டித்
தோட்டங் கொத்தி ...
கண்ட பலன்
ஒண்ணு மில்லே ...
காரணமேதான் புரியலியே ?

எவரெ வர்க்கோ
விடிஞ்சி ரிச்சீ ...
வீடு ... காணி
கெடச்சி ரிச்சீ ...
எமக்குமட் டும்
கெடைக்க லியே ...
இதுவும் ஏனோ ? புரியலியே !

எட்ட டுக்கு
மாளி கைகள்
எம்மு ழைப்பால்
ஒயந்தி ரிச்சீ ...
எம்''லயங் கள்''
மாற லியே
இதுவும் ஏனோ ? தெரியலியே !

எங்கள் கைகால்
வெலங்கு களையே
எந்த நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமொ டைப்போம் ?
அந்தநா ளைக்
காண லியே ...
அதுவும் ஏனோ ? தெரியலியே !

UNIVERSITY OF PERADENIYA
22 -7- 1997
LIBRARY

( மாறு ) ...

நாமு முணர்வு பெற்றுக்
கூடிச் செயலி யற்றும்
நல்ல நாளும் வாராதா ? - எம்
ஏழ்மை நிலைக ளைந்து
வாழும் வழிவ கைகள்
இங்கு வந்து சேராதா ? - எம்
சோக வாழ்வு மாறாதா ? - எம்
சோக வாழ்வு மாறாதா ?

06. மறவேன் !

ஒந்தன் ஒறவேமட்டும் - நான்
ஊறுகாயாத் தானெடுப்பேன் ...
ஒப்புக்கு ஆக இல்லே ...
உம்மையெத்தான் சொல்லிப்புட்டேன் !

உப்பாக நானெடுக்க - இனி
எப்பவுமே மாட்டேனே ...
உம்மையெத்தான் சொல்லிப்புட்டேன்
ஒரு நாளுமினி மாத்தமாட்டேன் !

சங்கடங்க வந்தப்போ - நீ
''சப்போட்''டுப் பண்ணாமே ...
உட்டுப்புட்டு ஓடுநியே - அதை - உசுரு
உள்ளமட்டும் நான் மறவேன் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. பந்த பாசம் !

காடு மலே
மேடு பள்ளம்
ஏறி யெ றங்கியுந்தான் ...
கால் கடுக்க
மேல் வலிக்க - நாம
கஷ்டப் பட்டு
வேலை செஞ்சோம் !

கண்ட பலன்
உண்டா ண்ணா ...?
ஒண்ணு மில்லே
இம்புட் டுத்தான்
பஞ்சம் பசி
பட் டினியோடே ...
நோய் நொடியும்
நொம்ப லந்தான் !

பட்ட தெல்லாம்
போது முண்ணு
உட்டுப் புட்டே
ஓடலாந் தான் ...
உடமாட் டேன்
எங்கு றதே - உசுருக்
குசு ரானஎங்க
தோட்ட முங்க ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. தோணி யோட்டம் ?

கோண எழுத்துளைக்
கொஞ்சநஞ்சம் படிச்சுப்புட்டு ...
கோட்டுஞ் சூட்டும்
போட்டுக் கிட்டு ...
தோட்டக் காட்டான்
இண்ணு எம்மைத்
தொந்தரவே செய்யுறாக !

நாங்கபேசும் பேச்சுகளோ
நாகரிகம் இல்லேண்ணு
நையாண்டி பண்ணிக்கிட்டு ...
பேசியேசி வெரட்டுறாக - செல
கூறுகெட்ட பயலுகளும் - செல
பேருகெட்ட பொண்ணுகளும் !

நாங்கவேலே செய்யாமே
நாலேநாள் படுத்தோமுண்ணா - ஒங்க
நாடே அசந்துருமே - நாடி
நரம்புஒண்ணும் ஓடாமே ! - ஆமா !
நாறும் ஒங்க நாடுண்ணு ...
நாங்களாடா ? சொல்லோணும்

நாலெழுத்துப் படிக்காத - நாங்க
நாதியத்த ஆளுகதான் - ஆனா
கோணெழுத்துப் படிச்சவுகளா ! – ஒங்க
குடுமிஅறும் நாங்கல் லாட்டீ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. கழிவிரக்கம்

கேப்பையிலே நெய்வடியும்
கீழேபுடீ வாயேண்ணா ...
கேப்பானுக்கு இங்கே புத்தி
கெட்டாடா ? போச்சீண்ணு ...
கேட்டாளே தன்பாட்டில் ...
கேட்டாளே எம்பாட்டி !

கேலிகிண்டல் பண்ணுனமே
கேட்டோமா ? அவபேச்சை !
குத்துதுடா ! கொடையுதுண்ணு - இப்பக்
கூப்பாடே போடுறண்டா !

சக்கரேண்ணு எழுதியதே
நக்கு இனிக் காதூண்ணு
எச்சரிக்கை பண்ணுனாளே - அதை
எவனாச்சும் கேட்டோமா்டா ?

கேப்பார் பேச்சைக் கேட்டுக்கேட்டே
கெட்டழிஞ்சே போனபின்னே ...
குந்தியே அழுகுறோண்டா - முச்
சந்தியே சிரிக்குதடா !

சங்கம்வைக்க வந்தவிங்க
சந்தாப் பணம்பறிக்க
சக்காளத்திப் போராட்டமே !
சரி யானவழி காட்டலியே ?

சாதிக் குண்ணும் ரகசியமா - இவிங்க
சங்கம் வச்ச சங்கதிதான் - இப்போ
சந்திக்கே வந்துருச்சே ! - இத் - தொழிற்
சங்கம் இனி வேணுமாடா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. எந்நன்றி கொன்றார்க்கும் ...**

மாடாய் ஒழைச்சோண்டா !
மம்மட்டியாத் தேஞ்சோண்டா !
நாமவந்து கோப்பிக்கொட்டை
நாயாயலைஞ்சி நட்டோம் !

தேயலே ரப்பரையும்
திரும்பவந்து நட்டதோடே ...
சாரைப்பாம்பா ரோட்டுவெட்டி
தாருவார்த்துத் தட்டுனோமே !

அத்தனையும் மறந்துப்புட்டு
அதையிதையும் சொல்லிக்கிட்டு ...
மொத்தை வைக்கப் பாக்குதுக
மொள்ளைமாறிப் பயசிறுக்கி !

ஆண்டவா ! நீ இருந்தா ?
அடுக்காது இதுண்ணு சொல்லி
அவிங்க தலை மேலே இடி
அடுக்கடுக்கா விழவையுடா !

**11. பிச்சை நன்றே ...**

சாமிகளே ! சாமிகளே !
சல்லிதாங்க சாமிகளே !
தருமம் கெடைக்கு முங்க !
தருமதொரெ மாருகளே !
தருமதொரெச் சாணிகளே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிஞ்சமட்டும் நானுந்தான்
முப்பத்தேழு வருஷங்களா
முள்ளுகானுக் குத்திவெட்டி - முதுகு
முள்ளொடிய வேலைசெஞ்சேன் !

இப்ப என்னால் முடியலிங்க
என்னசெய்வேன் ? சாமிகளே !
ஏதாச்சும் பிச்சை தாங்க
ஈசன் தொணை புரிவான் !

பிச்சை என்னே எடுக்க வச்ச
பச்சைக் காடு பூரா வுமே
பத் தீப்புடிச்சி எரியோ ணுண்ணே
பகவானே வேண்டு கிறேன் ?

## 12. பாதை தெரியுது பார் !

ரோசனை பண்ணிப் பண்ணி
ரோசங் கெட்டுப் போனோண்டா !
வேஷங் கட்டி வந்தவிங்க
வெற்றிக் கொடி நட்டுட்டாய்ங்க !

வந்தது வரட்டு முண்ணு
சந்திக் குநாம் வந்தாத்தான்
சங்கதிக சரிவருமாம்
தங்கு தடை இல்லாமே !

சாதி சமய முண்ணு
சகதியில் நாம் சிக்காமே
தாயு புள்ளே போல இங்கே
நீயும் நானும் சேர ணுமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத் தில்நாம் ஒண்ணூண்ணு
வைத்தால் கால் முன்னாலே ...
சொர்க்கம் நம் காலடிக்கு
சொணங் காமே வந்து சேருமடா ?

## 13. வேண்டி நிற்போம்

கால மெல்லாம்
கொழுந்தெடுத்தே
கஷ்டப் பட்டோம்
நாங்க இங்கே ...
கஷ்டப் பட்டோம்
நாங்க இங்கே !

வேத னைசோ
தனைக ளைத்தான்
வெற்றி விருதாய்
நாங்க பெற்றோம் ...
வெற்றி விருதாய்
நாங்க பெற்றோம் !

வீடு வாச
காணி யெல்லாம்
வேறெ வர்க்கோ
நமக்கு இல்லே ...
வேறெ வர்க்கோ
நமக்கு இல்லே

சங்கங் கள்பல
கண்டு மிங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க டங்க
பட்ட தோடே ...
பங்கப் பட்டே
போனோ முங்க – நாங்க
பங்கப் பட்டே
போனோ முங்க !

வேத னையே
சோத னையே
வேரு ஓட்டே
புடுங்கி வீச
வேறோர் அமைப்பே
வேணும் தோழி! - நமக்கு
வேறோர் அமைப்பே
வேணும் தோழா !

## 14. புதுப் பயணம்

வீடற்றோர் ஆண்டெண்ணு
வெளம்பரப் பந்தலிட்டு
வீதிவலம் வந்துநாம
வெறும்வாயேச் சப்புகிறோம் !

காணியற்றோர் ஆண்டெண்ணும்
கட்டியங் கூறிப்புட்டு
காட்டேவ லம்வருவோம்
கண்ணீரில் கால்கழுவி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒணவற்றோர் ஆண்டுண்ணும்
கனவுலே நாமகண்டு
நனவுலே காணாமே
நினைவிழந்து நாமலைவோம் !

நாதியற்றோர் என்றாலே
நமக்கேமொ தலிடந்தான்
நாடுகாணி வீடுஅற்றோர்
நம்மைவிட்டா ஆளேது ?

வெளிநாட்டுக் குக்காட்டி
வெள்ளமா ஒதவிபெற ...
படமெடுக்க வாராக ?
அப்பா ! பறட்டைத்தலை
முன்னே வாப்பா !

ஆண்டுபல நீண்டாலும்
ஆவதுவோ ஒண்ணுமில்லே !
வேண்டும்பு துப்பயணம் - இங்கே
விடியுஞ் செங் கதிர்ப்பயணம் !

## 15. முன் வாரீர் !

அவன் : குனிஞ்சதலே நிமுராமே
கொழுந்தெடுக்கும் செல்லாயி!
நம்ம நெலை ஒயர
நாள் வருமா? சொல்லாயி !

அவள் : நாள்வாரதும் வராததும்
நம் கையிலா? செல்லப்பா !
ஞாயந்தான் நீ கேட்டே
நானென்னத்தைச் சொல்லப்பா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் : தலை குனிஞ்சி போறவுக
தலை நிமுந்து வந்தா! ஆயி! - நம்ம
நெனலயே சரிப்பு டுண்ணூ - நீ
தலைநி முந்து சொல்லாயி!

## 16. மெய் வருத்தம்

கானுவெட்டி முள்ளுக் குத்தி
கைகால் ஒடம்பு வலி ...
ஒடம்புவலி தாங்காமே - என்
உசுரே வலிக்கு தையோ! - ராவில்
ஒறக்கம் வருகு தில்லே!

தண்ணிகொஞ்சம் போட்டாத்தான்
தலையெஒரு சுத்துச் சுத்தி ...
கண்ணுரெண்டும் இமை மூடும்
கடிதாகத் தூக்கம் வரும் - என்
உசுருவலி தோணாமே!

நாட்டுலேபோய்க் கள்கு டிச்சே - நாங்க
நாசமாப் போறோ மாமே? - இங்கே
ஓட்டலுலே ஜின்கு டிப்போர்
உத்தமியின் புத்தி ரரா? - ஐயா!
உம்மையேச் சொல்லீ ருங்க!

## 17. பொங்கல் ?

பொங்க வச்சிப் புதுவருஷம்
பலவ ருஷம் கொண்டாடீ - நாங்க
கண்ட பலன் ஒண்ணு மில்லே
கஷ்டம் தொடர் கதையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கக் கடைமட் டுமேதான்
எங்கும் தொறந்து கண்டோம்
சந்தாமாசம் பதினைஞ்சு ரூபாய்
சலிக்கா மேகட் டுகிறோம் !

பொங்கல் வைப்பை விட்டொ ழிச்சி - நாம்
பொங்கி மேலே எழுந் தாத்தான் - இங்கே
பொங்கி டுமாம் எம் வாழ்வு ஒரு
தங்கு தடை இல்லாமே !

## 18. எதிர்பார்ப்பு

ஒவ்வாத வாதுகளே - நாம
கவ்வாத்துப் பண்ணு கிறோம்
செய்வோம் அதைத் தொடர்ந்தே - எம்
கைகால்கள் ஓயு மட்டும் !

ஏறாத மலை ஏறி - நாம
ஆறாய் வியர்வை சிந்தி
அரும் பாடு பட்டாலும் - இங்கே
ஆறு தில்லே எம் துயரம் !

ஏச்சுப் பொழைப் பானே - இங்கே
எட்ட டுக்கு மாளிகையில்
எக்காளம் போடு கிறான்
எமக்கு இது தெரி யாதோ ?

அடிவ யித்தில் கட்டி வச்ச
கொடுமை நெருப்பை யெல்லாம் - ஒரு
சொடலை யிலே போட் டெரிக்கும் - அந்தச்
சுதந்திர நாள் பார்த்தி ருக்கோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. கடன் பளு

எங்க மொதலாளி !
தங்க மொதலாளி !
எங்க ளுக்கே கடன்கு டுக்க
எங்கி ருந்தோ வந்த வரு !

கைமாத் துத்தரு வாரு
கணக்கே யெழுது வாரு
குடுத்த பணத்தை மட்டும்
குறிச்சி வைக்க மறப் பாரு !

ஒட்டிக் குரெட் டியா
குட்டியே போடும் வட்டி
திட்டித் தொலைச் சாலும்
தேனொ ழுகப் பேசு வாரு !

ஈடு வச்ச நகை களையே
இறுக் கிறுக்கித் தேய்ப் பாரு
இடர் பட்டுச் சேர்த்த தெல்லாம்
இவருக் குத்தான் வாய்க் கரிசி ?

## 20. வசை !

கங்காணீ ! கங்காணீ !
கறுப்புக் கோட்டுக் கங்காணீ !
காட்டி எம்மைக் குடுத்த தாலே
காசு பணம் சேத்தவன் நீ !

பொய்க்க ணக்கு நீ யெழுதி
பொருள் சேத்து வச்சுப் புட்டு
பொய் ஒடம்பேப் போட்டுப் புட்டு – நீ
போயித் தொலைஞ் சிட்டியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த லோகம் போனாலும்
எங்க பாவம் ஒன்னேச் சுத்தும்
ஏமாத் துக் காரா ! ஒன்னே -- நாங்க
ஏசிப் பேசித் திட்டு கிறோம் !

சொக்கம் கை லாச முண்ணு – ஒன்னைச்
சொல் லீப் பொதைச் சாலும்
நரகத் துக்கே போடா ! ண்ணூ – ஒன்னே
நாங்க சொல்லீ அனுப்பி வச்சோம் !

கட்டை மொய்யேத் தான் எழுதி – ஒன்
கணக்கே முடிச் சாலும் – எம்மைக்
கஷ்டப் பட வச்சிப் புட்டு – நீ
கை லாசம் சொக்கம் போவி யாடா?

**21. ஒப்பாரி**

சாதி சனத் தோடே
சண்டே புடிச்சுக் கிட்டு
வாடி நாம போவோ முண்ணூ – என்னோடெ
வந்த மவ ராசாவே !

நாலு ரெண்டு ஆண்டு காளா – நாம
நல்லாத் தானே வாழ்ந்தோ முங்க !
நாலு புள்ளே பெத் தோமே
நாய் படாத பாடு பட்டு !

புள்ளே குட்டி படிக்கோ ணுண்ணூ
புத்தி சொல்லீத் திரிஞ் சிகளே – இப்போ
சொல் லாமேக் கொள் ளாமே
சொர்க்க லோகம் பூட்டி களே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் துலே சேர லேண்ணூ
சந்தா வும் கட்ட லேண்ணூ – செல
சாரா யக் குடிகா ரய்ங்க
சண்டைக்கு வாரா னுக !

சாதி பேரில் சங்கம் வச்ச – என்
சக்கா ளத்தீ மவங்க – நாங்க
சப்போட்டுத் தரமாட் டோண்ணூ
தாட்டுப் பூட்டு இங்கு றானுக !

பிச்சை எடுத் தாச்சு நாச்சும் – நம்ம
புள்ளை களேப் படிக்க வய்ப்பேன் – ஒங்க
ஆசை யைய்நான் நெரைவேத் துவேன் – நீங்க
அமைதி யாய்த் தூங் குங்களே!

குட்டீச் சொவரை யெல்லாம் – நான்
கோயி லுண்ணே கும்புட் டேன் – நீ
குருடி யாடீ? மாரி யாத்தா – எனக்கு
குடுத்தாய் இந்தத் தண்ட னையே !

சாமி தலை மேலே நான்
சாணி யள்ளிக் கொட்டிப் புட்டுத்
தாலி இப்போ அறுக்கு றேனே – என்
தரும தொரே போயிட் டாரே !

## 22. ஆயத்தம்

கோயிலைக் கட்டிக்
கும்பாபி ஷேஷங்கள்
செய்து முடித்தவர் நாம்..
செய்து முடித்தவர் நாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைகள் கட்டிச்
சாமிகள் நட்டுச்
சூடம் சாம்ராணித்
தீபம் புகைப் பிடித்தோம்!

தேருகள் செய்தே
சோடனை பண்ணி
தெருவில் இழுத்தவர் நாம்...
தெருவில் இழுத்தவர் நாம்!

இத்தனை யும்செய்த
எம்மையே இப்போ
யாருண்ணு? கேக்கு றாரே – பலர்
யாருண்ணு? கேக்கு றாரே!

எம்மை –
ஓட்டி விரட்டிட
ஒப்பந்தஞ் செய்தோர்
உத்தமர் உத்தமியா? – இல்லை
உளுத்தரா? சொல்வீரே!

சாமி தொணை யிண்ணு
நாமிங்கு நம்பியே
சந்தி சிரிக் கிறோமே – இங்கே
சந்தி சிரிக் கிறோமே!

எமைக் காக்க –
ஆமிக் கார னாக
ஆயுதம் ஏந்தியே
சாமி வரக் காணோமே...
சாமி வரக் காணோமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை நம்பினோம்
கைவிடப் பட்டோம் – நாம்
புதுவழி காணப் புறப்படுவோம் -- இனிப்
புதுவழி காணப் புறப்படுவோம் !

23. சங்கக் கடைகள்

சங்கக் கடைதொ றந்தே
சந்தாப் பணம் பறிக்க வந்த
சண்டா ளப் பாவி களால்
சந்தி சிரிக்கு தேடா !

கச்சிச் சண்டை பெருகி
கத்திக் குத்தில் போய்மு டிஞ்சி
ஆசுப் பத்திரி போலி சுண்ணூ – தெரு
நாயா நாம அலஞ் சோண்டா !

குடும்பத்துச் சண்டை யுந்தான்
குடுமி பிடி புதுக் கச்சீ ..
ஏங்கச்சீ ஓங் கச்சிண்ணூ
எங்க ளையே கூ றடிக்கும் !

சாதி பேரில் சங்கம் வச்ச
சதிகா ரப்பசங் களாலே -- இங்கே
சமநீ திக்குப் போரா டாமே – நாம
சாக்க டையாப் போனோ மேடா !

இந்தக் –
கைமாத் துக்கா ரங்களே
கட்டை யிலேவைக் குமட்டும் – எங்க
கஷ்டம் தொலை யாது – முழு
நஷ்டம் நமக்கே தான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 கணக்கப் பிள்ளை

மொட்டைப் புடுங் குண்ணு
மொறைக் கிறான் ...
முத்தெலை கூ டண்ணு
முறுக் குறான் ...
இப்புடி ... அப்புடி
ஏழெட்டு ராத்தலே
எதுக்குடி ? வெட்டி
ஓதுக் குறான் !
எதுக்குடி ? வெட்டி
ஓதுக் குறான் !

வெட்டி யொதுக் கிய
ராத்தலை யெல்லாமே
வெட்டி யாள் பேருலே
பதியு றான் – கள்ளப் பேர்
வெட்டி யாள் பேருலே
பதியு றான் !
வெட்டி யாள் பேருலே
பதியு றான் !

கள்ளப் பேரு போட்டு
சேத்த பணத் துலே
காணி பூமிகளை
வாங் குறான் !
காணி பூமிகளை
வாங் குறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையும் கட்டி
ஓட்டையும் போட்டே
கேட்டும் சரி பண்ணிப்
பூட்டிப் புட்டான் – புதுக்
கேட்டும் சரி பண்ணிப்
பூட்டிப் புட்டான் !
கேட்டும் சரி பண்ணிப்
பூட்டிப் புட்டான் !

மொட்டைப் புடுங் குண்ணு
மொறைக் கிறான் – கணக்கன்
முத்தெலை கூட ண்ணு
முறுக்கு றான் – மீசையை
முறுக்கு றான் !

கள்ளப் பேரு போட்ட
கதைகளை சொன்னாக்கா ...
கண்ணைச் சிமிட்டிப் பல்
இளிக் கிறான் ! – கள்ளன்
கடுக்கனை ஆட்டியே
நடிக் கிறான் !
கடுக்கனை ஆட்டியே
நடிக் கிறான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஒப்பாரி

அப்பா ரோடே
சேத்தே என்னே
அனுப்பீ ருங்க சாமிகளே !
தாலியே நான்
அறுத் துப்புட்டு
தனியா இனி
இருப் பேனா ?

என்னையே
அனுப்பிப் புட்டே – நீங்க
பின்னா டித்தான்
வருவீ கண்ணு
எண்ணி யல்லோ
நா னிருந்தேன் ! – ஐயோ !
எல்லாம் மண்ணாப்
போச்சு தையா !

பூவும் பொட்டு
மாக வேதான் - நான்
போவேண்ணு எண்ணித்
தானிருந்தேன் – என்னைப்
பூவும் பொட்டும்
இல் லாமே – வெள்ளைச்
சீலை கட்ட
வச்சுப் புட்டே – நீங்க
செவ லோகம் போனீரே ?

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY



192968
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பால் நிலவு காய்ந்ததே

எம் உழைப்பு வாழ்ந்ததே
எம் உடலம் தேய்ந்ததே
எம்மையே ... என்றுமே
ஏளனமே செய் கின்றார்களே !
அது ஏன்? ஏன்? ஏன்?

மாடி மனைகளுடன்
வீதி வயல் முழுதும்
ஆன திங்கு யாராலே ?
யா ... ரா ... லே ?

கோயில் குளங் களுடன்
ஆடை யா பரணம்
ஆன திங்கு யாராலே?
யா ... ரா ... லே?

எம் – கை
விலங்கை முறித்தே
எம் – கவலை
முழுதுங் களைவோம் !
சம – நீதி
காணும் நாளை
நாம் படைப்போம் – நாளை
நாம் படைப்போம் !

27. ஒப்பாரி

மகனோடே மருமகளே
மணவறையில் ஏத்தி வச்சி
மாலையிடும் முன்னாடி
மாட்டேன்டி நான்போ கண்ணு
மார் தட்டீச் சொன்னீகளே ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் தாங்க ஒங்க ளுக்கு - இப்போ
மலர்மாலே எடுக்கு றானே - என்
மனமொடிஞ்சி அழுகு றேங்க - என்
மனச் சொமையே ஆறாமே!

பூவோடே பொட்டோடையே
போவேனல்லோ நானிருந்தேன் - என்
பொட்டே அழிச்சுப் புட்டு - நீங்க
பொட்டுண்ணு போனிகளே?

நெய்ப்பந்தம் புடிக்க ஒரு
நேர்ப்பேரப் புள்ளே இல்லாமே - நீங்க
கண்ணுரெண்டே மூடி யதன்
காரணந்தான் என்னாங்க?

**28. தர்க்கம்**

நாங்க நட்ட தேயிலையோ - இங்கே
நல்லா இருக்கையிலே
நாம பட்டுப் போனதுக்கு - ஏது?
ஞாய முண்ணு சொல்லுவீக!

காலு வச்ச நாள்மொதலா - நாம
கஷ்டமே பட்டதாலே - நாம
கண்ட பலன் உண்டுண்ணா ...
கவலைப் பெருஞ் சொமையே!

வர்ரது வரட்டு முண்ணு - துணிஞ்சி
வரிஞ்சி கட்டி நிக்காமே ...
மாத்து வழி இல்லேண்ணு - யாரு?
மனந் தொறந்து சொல்லுவாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. தெம்மாங்கு

கஷ்டப் பட்டுக்
கஷ்டப் பட்டுக்
கண்ட தொண்ணும்
இல்லே மச்சான் !
கட்டத் துணி
இல்லா மத்தான்
கால மெல்லாம்
ஓடு திங்கே !

காணி நெலம்
தாரோ முண்ணும்
கதைய ளப்பும்
இருக்கு மச்சி !
காலம் நல்லா
வாரது போலக்
கனவு லேயும்
கண்டேன் புள்ளே !

வீடு வாசல்
கதையும் கேட்டோம்
விடிய வியே
இன்னும் மச்சான் !
நாடு கெட்டுப்
போகுற தைத்தான்
நாளும் கண்ணில்
காணு கிறோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு ரிமை
தாரத் தோடே
ஓட்டுந் தரப்
போறார் மச்சி !
கேட்ட தெல்லாம்
தருவா களாம்
ஓட்டுப் போட்ட
பின்னே புள்ளே ?

ஓட்டையே வாங்கிக்கிட்டு
ரோட்டு ரோட்டா
ஓதைச்ச தெல்லாம் ...
உம்மைக்கே மறந்துட்டியா ?
ஊத்தை வாளி
ஆளுநீ மச்சான் !
உருப்புட வேநீ
மாட்டே ! போ ! ஓய் !

ஓட்டை எங்க
கையிலே தந்தே
ரோட்டில் பிச்சை
எடுக்க விடப்
போட்டிருக் காகளா
திட்ட மேதும் ?
புரிஞ்சிக் கோணும்
புத்தியா மச்சான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டை லயக்
காம்பு றாவையே
உரிமை யாக்கித்
தருவ முண்ணும்
நேத்துச் சொன்னப்
புதுக்க தையையும்
நெனைச்சுப் பாரு
நீயும் மச்சான் !

வீடு காணி
ஓட்டுக் கதையை
விட்டுப் புட்டு
வேலையெப் பாரு !
காடு மலைமேடு
ஏறி இறங்கிக்
கண்ட தென்னா ?
சொல்லு மச்சான் !

சாமி படங்களே
வச்சுந் தானே
சாம்புராணி சூடப்
பொகையொளி புடிச்சம் !
ஏனுண்ணு எந்தச்
சாமிகேட் டுச்சி ?
ஏமா றுறோமே
இன்னுமே மச்சான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி சாலி
நீதான் மச்சி !
புரிஞ்சுக் கிட்டேன்
வெஷய மெல்லாம் !
சத்தில் லாத
கதையை நம்பி
சங்கடத் தில்தான்
மாட்டிக் கிட்டோம் !

சாதி பேரில்
சங்கம் வச்ச
சக்கா ளத்தி
மவங்களே விட்டே ...
சமதர் மங்குற
கச்சியில் சேந்து
சமஉரி மைக்கே
சண்டை புடிப்போம் !

யோசிக் காமே
எல்லாஞ் செஞ்சி
நாச மாகிப்
போனோம் ! போதும் ! — இனி
யோசிச் சேதான்
எதுவுஞ் செய்யணும்
தோசிகளைத் தலை
முழுகி மச்சான் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. **சங்க(ம)ம் ?**

சங்கப் பிரிவினில்
சண்டைகள் ஆயிரம்
கண்டு களித்தவர் நாம் – நாளும்
கண்டு களித்தவர் நாம் !

கம்பு தடியடி
வம்பில் சங்கம் பல
உண்டு பண்ணியோர் நாம் - வீம்புக்கு
உண்டு பண்ணியோர் நாம் !

மண்டை யுடைந்து
மருந்துகள் கட்டவும்
சங்கத்தை நாடியோர் நாம் - தீய
சங்கத்தை நாடியோர் நாம் !

கோடு வழக்கென்று
ஓடித் தாலிவிற்றே
கோட்டை நிரப்பியோர் நாம் – கறுப்புக்
கோட்டை நிரப்பியோர் நாம் !

சங்கச் சண்டைகளைச்
சாராயங் கள்ளுடன்
சங்கமம் செய்தவர் நாம் – தவறணையில்
சங்கமம் செய்தவர் நாம் !

சாதி இனமதப்
பேதம் பிரிவினை
பேசிச் சிதைந்தவர் நாம் – எங்குமே
பேசிச் சிதைந்தவர் நாம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க உணர்வுடன்
சொர்க்கம் படைத்திடப்
புத்தி வருவ தெப்போ ? - நமக்குப்
புத்தி வருவ தெப்போ ?

31. (சோ / கோ) ஷலிஸ்ட்ஸ் ?

சோஷலிசம் பேசி இங்கே
சொவப்பூக் கொடி புடிச்சீ
ஓட்டுவாங்க வந்த தோழர்
உருப்படியா என்னா ? செஞ்சார் !

ஓட்டுரிமை யேப் பறிச்சீ
வாய்க்கரிசி போட் டப்போ ...
கேட்டிவுக போராடாமே
ரோட்டில் விட்டுப் பூட்டாகங்க !

சோசலிசப் பேச் செல்லாம்
சொளையா ஓட்டுக் குத்தாங்க - இந்தத்
தோசம் தொலையுற நாள்
தூரவா ? கிட்ட வாங்க ?

இனவாதம் பேசுங் கச்சீ
இடுப்பே ஒடிக்காமே ...
சனநாய கம் வாழ்ந்து
சரிப்புடுமா ? சொல் லுங்க !

32. தலை வேறு ?

நம்ம தலைவரு
நல்ல தலைவரு
நம்மலுக் காகத்தான்
நாலுமே செய்வாரு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டை லயத் தறைக்
காம்புறாக் குள்ளேயே
ஒக்கார வைக்கவே
ஒதவிக பண்ணுவாரு !

வீடு காணிபூமி
வாங்கியே தாங்கண்ணா ...
வேணாம் அதுகண்ணு
வேறே கதைசொல்வாரு !

ஓட்டுப் போடமட்டும்
ஒபதேசஞ் செய்வாரு ...
உரிமையேக் கேளுங்கண்ணா
ஊமை ஆகிறுவாரு !

சந்தாப் பணத்துலே
மஞ்சக் குளிக்கவே – தன்
சங்கத்தில் மட்டுமே
'அங்கம் வகீ'ம்மாரு ?

வர்க்க ஒணர்வுகள்
வக்கிரம் எம்மாரு ...
'வென்றெடுப் போம்சம
உரிமைகள்' எம்பாரு ?

சாதி சமயத்தைத்
தூக்கிப் புடிச்சுக் கிட்டே ...
ஒத்துமை வேணுண்ணும்
ஊருக் குபதேசி ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. நீதி ?

கறுவாவுலேத் தோட்டம்போட
மொதலில் கொஞ்சம் பேருவந்தோம் !
கோப்பியிலே தோட்டம் போடணும்
கொஞ்சப்பேரு பின்னேவந்தோம் !

பூச்சரிச்சிக் கோப்பிசாக
போகச்சொன்னான் வெள்ளைக்காரன் !
வேதனையைச் சொமந்துக்கிட்டே
வெறுங்கையோடு திரும்பிப்போனோம் !

தேயிலையில் தோட்டம் போடத்
திரும்பஎம்மை ஓட்டியாந்தான் !
தொடந்துஇங்கே இருக்கச்சொல்லி
தொன்னைரப்பர் நாட்டவச்சான் !

காடழிச்சித் தேயிலைத் தோட்டம்
ரோட்டு வெட்டுன ஆளுகநாங்க !
காட்டில் கரடி புலிசிங்கத்துக்கு
எரையானோம் எத்தனையோ பேர் !

மன்னார் குருநா கலைவழியில்
மண்டை ஓடு கெடந்துச் சுண்ணா ...
கண்டவுக சொன்னா கங்க !
கண்டிகளா ? நீங்க ! ஏங்க ?

தேயெலைச் செடிக் கடியிலே
தேங்கா மாசி இருக்கூண்ணே ...
நம்பிவந்த ஆளுக நாங்க !
நம்புவீகளா ? நீங்க ! ஏங்க ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொதந்திரம் சொதந்திர முண்ணு
சொன்னதைத் தான் கேட்டோமுங்க
இதுவரைக்கும் அது என்னாண்ணு
எங்களுக்குத் தெரியலியே ! ஏங்க ?

ஒழைப்பவர் மட்டுமிங்கே
உரிமையெல்லாம் அனுபவிக்கும்
ஒயந்தஆச்சி ஏற்படாது
உருப்புடாது ஒண்ணுமிங்கே ?

**34. பயணம்**

தோட்டத்தொழி லாளிகளின்
தொயரமாம் வாழ்க்கையையே
சொன்னாலும் வாயழுகும்
கேட்டாலும் காதழுகும் !

கேட்டசொன்ன காதுவாயி
கேவி அழுகையிலே
பார்த்துவிட்ட கண்ணிரெண்டும்
வார்க்காதோ ரத்தக் கண்ணீர் ?

ஆறோடே ஆறுமணி
காடு மலைகடந்து
நாயாய் அலைஞ்சலைஞ்சி
நாவரண்டு போகு தையா !

மாலையிலே வீடுவந்தா
காலுகையி மேலுவலி
நாளையநா ளைநெனைச்சா
நாடிநிற்கப் பாக்குதையோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் இல்லாருண்ணு
நாக ரிகமானோர் சொன்னாலும்
நாங்கபடும் பாட்டை அவுக
தாமும்பட்டாத் தான்தெரியும்?

காணிபூமி இண்ணுசொல்ல
யாதுமுண்டா? எங்களுக்கு?
தோட்டக்காட்டான் இண்ணுமட்டும்
தொரைத்தனத்தார் கேலிசெய்வார்!

வீடுவாசல் இண்ணுசொல்ல
ஏதுமுண்டா? எங்களுக்கு?
ஓட்டை லயத்து அறையே
ஒருநூத்தி எம் பதாண்டாய்!

வீடுவாசல் காணிபூமி
வேணும் எமக்கு முண்ணா ...
வேறே கதையைச் சொல்லி
ஓரங்கட்டப் பாக்குறாக?

வீடுவாசலைக் குடுத்தே எம்மை
வெளியிலே போகவிட்டா ...
ஏத்துமதி வருமானம்
எறங்கிவந் துருமாம் தரைக்கே?

நல்லநல்ல தோட்டங்களே
நாசமா ஆக்கிநீங்க?
நாங்கஇன்னம் மறக்கலேடா!
ஞாயமுன்னா? சொல்லுவீக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப்பணயம் வச்ச அந்த
ஏமாத்துக்காரன் தலைவர்களோ
சிம்மாசனம் ஏறியே
செறந்து விளங்கு ராய்ங்க ?

சமதருமப் பயணத்தை நாம்
சட்டுப்புட் டுன்னு தொடங்கி
சனியனைத் தொலைக்காட்டி
சங்கடந்தான் தொடர்கதையே ?

**35. மாரி / மேரி — அம்மா !**

வீதி வலம் வரும்
மாரி அம்மா ! — எம்
வேதனை யைக் கொஞ்சம்
கேளு அம்மா !
வீதி வலம் வரும்
மேரி அம்மா ! எம்
வேதனை யைக் கொஞ்சம்
கேளு அம்மா !

ஆறோடே ஆறு நாள்
வேலை யம்மா - ஆனால்
அஞ்சு சதங் கூட
மிஞ்சு தில்லே - ஆமா
அஞ்சு சதங் கூட
மிஞ்சு தில்லே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாசல் இண்ணு
சொல்லிக் கொள்ள – உண்டு
ஓட்டை லயம் !
காணி பூமி இண்ணு
சொல்லிக் கொள்ள - உண்டு
பொதை குழிதான் ?

லயத்துக் காம்புறா இருட்டில்
வெளிச்ச மில்லே – ராவில்
லயமும் இருட்டையே
போத்தியே இருக்கு !

''ரேடி யோ'' ''டீவி'' கேக்க
பாக்க ஆசை – ஆனா
விடிவது எப்போண்ணு
தெரிய லியே ?

கடை கன்னிக்குப்
போனாப் பாத்துப் பாத்துக்
கண்ணுகள் ரெண்டுமே
பூத்துப் போச்சி !

வாசக சாலைண்ணா
என்னாங்க ? அதை
வாங்கிக்கச் செலவு
என்னாகும் ? – அது
வாயிக்கி வெத்தலை
மாதிரிங்களா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுப் பட்டித் தோட்டப்
பாடசாலையிலே - ஒரு
மாத்தத்தைக் கண்டிட
ஆசையுங்கோ ! - நம்ம
தோட்டத்துத் தலைவரைக்
கேட்டோமுங்க - ஜில்லாப்
பெரதி நிதி காதிலும்
போட்டோமுங்க !

அள்ளி வய்க்கிற பயலுகளேதான்
தலைவருகளா - இங்கே
ஆகியே போனாய்ங்க
மாரி அம்மா - ஆமா
மேரி அம்மா !

எங்க -
தோட்டத்து இஸ்க்கூலுப்
பாட்டு நடனம் - கருத்தை
ரோட்டுலே தானடி !
மாரி யம்மா !

விளையாட்டுப் போட்டிக
நடத்து வதும் - அதே
கருத்தை ரோட்டுலேயே
காளி யம்மா - ஆமா !
மாரி யம்மா - ஆமென் !
மேரி யம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்புத் தம்புறு
உடுக்கு எல்லாம் – நாங்க
தண்ணியெப் போட்டாத்தான்
தடபுடலா – இங்கே
அடி படுமே - குடுமி
பிடி படுமே?

காளி மாரீண்ணு
நம்பி நம்பி – நாங்க
கண்ட பல னோ
ஒண்ணு மில்லே – ஆமா
வெட்கம் சொல்ல?

மாரியெக் காளியே
விட்டுப் புட்டே – நாங்க
மேரி மாதாவே
சரண் அடைஞ்சோம்! ஆமா!
கேளு நீ தாயே!
எம் குறையே!

செல்வமும் வீரமும்
வேணு மம்மா – உடன்
கல்வி கற்கவும்
வழி காட்டு?

கை நாட்டே போடுற
பரம்பரைக்கு – ஆமா!
கையெழுத்துப் போடும்
நாள் வரவே! – நீ
கை குடம்மா! – ஆமா!
மேரி அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. உழைப்பு

ஒழைப்பை நம்பிப்
பொழைச் சிருக்கோம்
தங்கமே தில்லாலே – நாங்க
ஒருத்த னுக்கும்
அடிமை யில்லே
தங்கமே தில்லாலே!

ஊரை ஏய்க்கும்
பசங்க ளெல்லாம்
உப்பல் எதாலே? – எங்க
ஒழைப்பைச் சொரண்டிச்
சொரண்டிச் சொரண்டிச்
சேக்குறத் தாலே!

சாதி மதவென
மொழிகள் எங்குற
பிரிவினை னாலே – நாங்க
சிதறி நிண்ணாச்
சரிப் படாது
குத்தம் எம்மேலே!

தொழிலா ளியுமே
வெவசா யியுமே
தோளிற் கைபோட்டுத்
தொடங் கினா ஒரு
போ ராட்டம்
விடிவு கைமேலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெசய மெல்லாம்
வெளிச்ச மாகும்
அதுக்குப் பின்னால் தான் - இதை
வெளங்கிக் காமே
இருந்த முண்ணா
குத்தம் எம்மேலே - ஆமா !
குத்தம் எம்மேலே !

**37 கோலாட்டம் ... கும்மி**

கோலாட்டம்
கும்மியே எல்லாம்
கொண்டு வந்த
ஆளுக நாம் !
வாலாட்டம் எங்ககிட்டே
வச்சிக்கா தீங்க ! - அப்பறம்
வாய்க்கு வந்த
படிக்கு ஏசு
வோங்க ?
நொம்மா நோத்தாண்ணு
வாய்க்கு வந்த
படிக்கு ஏசு
வோங்க ?

கோடாலிக்
கொண்டை போட்டுக்
கொசுவத் தையும்
இழுத்துக் கட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மி யடிச்சவுக
நாங்க - எம்முதுகில்
அம்மியா அரைக்கப்
பாக்கு றீங்க? - ஏங்க?
எம் முதுகில்
அம்மியா அரைக்கப்
பாக்கு றீங்க?

சங்கை கெட்ட
பசங்க ளோடே
சங்கத் துலே
சேந்தி ருந்தே
பங்கப் பட்டே
போனவுக தாங்க...
அது நாலா?
எங்க கிட்டே
வாலாட் டுறீங்க? - ஒங்க
இடுப்பே ஒடிச்சிருவம்
போங்க!

வரிஞ்சிச் சீலையை
இழுத்துக் கட்டி
வாச லுக்கே
வந்தோ முண்ணா...
தெரியு முங்க
எங்க வுட்டுச்
சேதி - அப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவுடு பொடி யாகும்
ஒங்கக் கியாதி - இதைத்
தவ றாமே
யாது பண்ணு
றோங்க !

காலம் வரும்
காலம் வருண்ணு ...
கையைக் கட்டி
நாமி ருந்தா ...
ஏலமே போடுவீக
எம்மே - அப்பறம்
ஓலமே போட்டால்
ஏது ? நன்மை

ஏமாத்துக் காரங்களே
எனங்கண்டு ஒழிப்பதற்கே
எதிர்பார்த்தே தானிருக்கோ
முங்க ...
எழுதிவைங்க
தப்பாது குறிண்
ணூரங்கோ - அப்பறம்
குத்தம் கொறை
எங்களைச் சொல்லா
தீங்கோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டப்பக்
கங்காணி மாரைக்
கட்டி வச்சி
ஓதச் சொதச்சே
கட்டையிலே ஏத்தி வச்சித்
தாங்க – நாங்க
முட்டி ஒடைக்கும் வரை
யேங்க - இனி
முழிச்சிக் கிட்டே
தானிருப் போம் !
போங்க ! - தலைவர் மாரே !
ஒங்களைத்
தப்பவிட மாட்டோம்
சொன் னோங்க !

சாதிக் குண்ணு
சங்கம் வச்சச்
சக்கா ளத்தி
மவங்க வுட்டுச்
சங்கத் துலேயே
இருந்தோ முண்ணா ...
சங்கடமே ! கேட்டுக்கோங்க
சொன்னா - அப்பறம்
எங்க மேலே
குத்தம் குறை
சொல்லா தீங்கோ ! - ஆமா !
குடுமி அறத்
தான் போகு
தூங் கோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. மலையகக் கல்வி

ஆண்டு அஞ்சுப் புலமைப்
பரிசில் பரீட்சையிலே
எம் புள்ளைக
எல்லாருமே அவுட்டுங்க !

கல்விப்பொதுத் தாராதர
''ஓஎல்'' பரீச்சையிலே ...
எல்லாருமே அவுட்டுங்க
மெத்துசுலே ! சயன்சுலே !

காசுபண முள்ளவுக
புள்ளேகளுக் கேதாங்க ...
இந்தப் பரீச்சைகளே
கைகுடுத்து ஒதவுமுங்க !

அவுகளும் மேலேபோயி
''ஏஎல்'' பரீச்சையிலே
அவுட்டாகி யேபோயி
ஐயய்யோ ! பெருமூச்சிங்க !

ஏண்டா ? நீ அவுட்டுண்ணு
எவனையுமே கேளுங்களே !
அவன்சொல்லும் வேதமெல்லாம்
''ஆசிரியர் இல்லீங்க !''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார் செலபேரும்
இல்லார்பல பேரிருந்தா ...
எல்லாங்கூழ் முட்டையேதான்
இதையும் நானே சொல்லணுமா ?

ஏழைத்தொழி லாளிகளின்
எந்த ஒரு 'புள்ளைக்கும்
ஏதுங்க ? காசு இங்கே
''டீயூஷன்'' கடைப் பீசுக்''குங்க !

ஏணியே எடுத்துப் புட்டே
''ஏறு பாப்போம்'' என்பதுதான்
புலமைப் பரீச்சைகளே ! - எம்
புள்ளைகுட்டி அத்தனைக்கும் !

கூட்டத்தைப் போட்டவுக
கூச்சல்மட்டும் போட்டாக ! - எம்
குட்டிபுள்ளே அத்தனையும்
கோட்டைவிட்டே திரியுதுங்க !

''டியூஷன்'' கடை போகாமே
முடியாதாம் எம் புள்ளேகுட்டி
சயன்சு மெத்சில் பாசுபண்ண ! - ஒரு
வசதிபண்ண யார்வருவார் ?

எலவுசக் கல்வியிண்ணு - நீங்க
எழவுவீட்டு மாரடிச்சா ...
எம்புள்ளே குட்டியிங்கே
''ஏஎல்'' ''ஓஎல்'' பாஸ்பண்ணுமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கவுண்டன் டொக்டர் எஞ்ஞினியரா
எம்புள்ளேக வரணுமுண்ணு
கொக்கரிச்ச தலைவர்மாரேக்
கூப்புடுடா ! கேள்வி கேக்க ?

39. கேளு !

சாதியிலே கொறெஞ்ச
சக்கிலியன் வேலுாண்ணு ...
சங்கடங்க பண்ணுனதால் ...
இப்போ –
சங்கதியேக் கேளுங்கோ !

வேலு இப்போ
மதம் மாறி
வேறே வழி
பூட்டா னுங்க ...

ஏசு மதமாங்க ...
இப்போ - அவன்
வேலில் லீங்க !
ஏசடியான் !

பள்ளன் பறையண்ணா
நம்ம ஆளு
களையே நாங்க
தொல்லை குடுத்ததாலே
இப்போ - அவுக
தூரவே பூட்டாகங்க ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசுலாம் மதத்துலே
சேந்தே - இப்போ
வேறே வேறே
பேருங்க !

சாதி வச்சித் தாங்க - நாங்க
சாக்கடையாப் போரோமுங்க !
கூடியே நாம் வாழ - ஒரு
குறுக்கு வழி சொல்லுங்கோ ?

**40. ஜனநாயகம் ?**

சடலங்கள் மகாவலியில்
படகோடப் பார்த்திடவே
ஓதவியது ஜனநாயகம்
உண்மை தெரிஞ்சுக் கங்க !

டயருமேலே உயிரோடே
எரிஞ்ச சடலங்களே
இங்கேயே கண்டோங்க !
அஞ்சு நச்சத்ர ஜனநாயகம் ?

இளைஞர் பல் லாயிரம்பேர்
பலிகொடுக்க ஜனநாயகமா ?
அய்யய்யோ ! அப்புடிண்ணா ...
அது எமக்கு வேணாமுங்க !

பட்டினிச் சாவுகளேப்
பார்க்கவா ஜனநாயகம் ?
விட்டுத் தொலைச்சுருங்க !
வேண்டா முங்க அது நமக்கு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. தோடுடைய செவியன்?

தோடுடைய செவியனுண்ணு
தோத்திரம் பாடுனோங்க – எங்க
தொண்டைத் தண்ணி – ஆமா!
சத்தியமா வத்தீங்க!

கங்காணி மாரை நம்பி
மன்னார் குரு நாகல்வழி
கால்நடையா நாங்க வந்த
கதையோ பழசுங்க!

எங்கதெகி அம்போண்ணாலும் ...
கங்காணி மார் ஒயர்ந்து
தலைவர் மந்திரி யாகி
கொழும்பு வாசி ஆகீங்க!

ஆச்சீக்கி வந்தவிங்க
ஆளைவிட்டு எமை அடிச்சி ...
ஆக்கினை பண்ணினாலும்
(யா) ஆருமில்லே கேக்கங்க!

கோயிலிலும் சாதிபேதக்
குடுமிபிடி சண்டைங்க!
போயி நீங்க பார்த்தீகண்ணா ...
புரியும் நெலைமேங்க!

சாதி பேரில்
சங்கம் வச்சும்
சனியன் தொடருதுங்க!
மோதி முட்டி
மூக் கொடைஞ்சி ...
வீதிக சிரிச்சே
நாறு துங்க

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. பாராளு மன்றம்

பாராளு மண்டத்துலே
பருக்கே சோறு
கெடைக்கு மாங்க ?
யாரு யாரோ ?
போறார் வாரார்
யாரும் ஏங்க
சொல்ல லீங்க ?

காசு பணம்
மொளைக்கு தாங்க ?
கண்டு வந்து
சொல்லீ ருங்க !
நாம போனா
நடக்குங் களா ? - சாமி !
நன்மை யுண்டு ! (பா)
சொல்லீ ருங்க !

காரு ஜீப்பேக்
காணு ரப்போ - ஒரு
மாதிரியா இருக்குங்க !
கட்டாயம் நீங்க - அதைக்
கண்டு வந்து
சொல்லீ ருங்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனே ஓடம்போடெ - அவுக
போயித் திரும்பயிலே
(யா) ஆனே ஓடம்பாக - அவுக
ஆன துக்குக்
கார ணத்தே - கண்டு
அய்யா ! வந்தே
சொல்லீ ருங்க ?

## 43. தஸ்லிமா நஸ்ரின்

தஸ்லீமா நஸ்ரினே !
தாயே ! - நீ
தாய்க் குலத்தின்
உரிமை களைத்
தாண்ணு தானே
ஆம் ! கேட்டாய் !

உன் -
தலையே இவர்
கேட்கு றாரே ! - இவுக
தலை யுள்ள
ஆளு களா ?

ஓங்க -
ஆயி பொண்ணே
இல்லை யாண்ணு ..
ஆமா -
ரோசம் வரக்
கேளு ! அம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY

492968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
22-7-1997
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தோட்ட மக்கள் பாடல்கள்


ஆசிரியர்

**கண்டி எம். ராமச்சந்திரன்**



வெளியீடு

**1996 - 10 - 18**

அச்சகம்

சிட்னி பிரிண்டர்ஸ்

258/1, டீ. எஸ். சேனாநாயக்க வீதிய

கண்டி

ஆக்கங்கள் : 43

பக்கங்கள் : 64

படி விலை : ரூபாய் 50

**ISBN 955-96076-0-X**

492968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org